
# தமிழ்ச் சிட்டு

தனித்தமிழ்
சிறுவர்
கலை இதழ்
விலை 15 காசு



பதியவை மனத்தில்;
பண்பாடே செல்வம்!
புதிய உணர்வு கொள்!
புன்மை அகற்றுவாய்!
முதியவர் உரைகேள்!
முழுமை அறிவு கொள்!
மதியை, உளத்தை
மலர்த்தலே வாழ்க்கை!

குரல்: 2. இசை 8.






O கடந்த திங்கள் வெளிவந்த தமிழ்ச்சிட்டில் கழுதை யழுதகதை என்று எழுதப்பட்டிருந்த பாவியம் தொடர்ந்து சென்ற இதழில் இடம் பெறாததால், ஏமாற்றமுற்றவர்கள் என்னைச் சேர்த்துப் பதினொருவர்.

—சி. அறிவுறுவோன், அம்மையகரம், வரகூர் (அஞ்) தஞ்சை.

O அன்பிற்கினிய ஐயா! யான் இப்பள்ளியில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியனாகப் பணியாற்றுகின்றேன். தாங்கள் அரிதின் முயன்று பள்ளிப் பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில், அவர்தம் உள்ளப் பாங்கை உயர்த்தும் வண்ணம் சிறப்புற வெளியிடுகின்ற தமிழ்ச்சிட்டு, வருங்கால மக்கள் அமைப்பை நன்முறையில் வழிகாட்டிச் செல்லுமென நம்புகின்றேன். இளம்பிள்ளைகளின் உளப்பாங்கிற்கேற்ப, தமிழர் பண்பாடு முற்றிலும் மாறுபடாதிருக்குமாறு பணியாற்றுகின்ற தங்கள் போக்கும் நடையும் போற்றற்குரியன. தமிழ்ச்சிட்டு வண்ணச் சிட்டாய்ப் பறந்து, இளைஞர்தம் எண்ணத்தில் புகுந்து நிறைவை யளித்துக் குறைவைப் போக்கும் அழகு வியத்தற்குரியது. இப்பள்ளியில் எனனுடன் பணியாற்றும் திரு. உதயை.மு. வீரையன் அவர்கள் முயற்சியில் 50க்கும் மேற்பட்ட சிட்டுகள் பறக்கின்றன என்பதறிந்து உள்ள உவகை எய்துகின்றேன்.

—சி. பரஞ்சோதி, சானகி அண்ணி உயர்நிலைப்பள்ளி,
ஆலத்தம்பாடி, பொன்னிரை, தஞ்சை.

O தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களை எம் பள்ளியில் உள்ள ஒவ்வொருவரிடமும் காட்டிப் பயன்பெற ஆவன செய்கின்றேன். என் கைக்காசைத் தமிழ்ச்சிட்டிற்காக நிறைய செலவிட்டுள்ளேன். தூவல் வாங்க என்றும், பொத்தகம் வாங்கவென்றும் வீட்டில் உருபா வாங்கித் தமிழ்ச்சிட்டுக்கு அனுப்பியுள்ளேன். தமிழ்ச்சிட்டை வரவழைத்துக் கொடுத்தபின் நண்பர் காசு தர மறுத்தால், நான் கேளாது விட்டு விடுவதும் உண்டு. தமிழ்ச்சிட்டை என் சேலத்து நண்பர் ஒருவர் என்னிடம் காட்டி, 'நண்ப! தனித்தமிழ் வளர்ச்சிக்கு நீ உதவுக' என்றுரைத்தார். நானும் உறுப்பினர் ஆனவுடன், எனது ஊர் முகவராகவும் பணியாற்றுகின்றேன். தமிழ்ச்சிட்டுக்கு வேறு யார் துணைபுரிந்தாலும் நான தலைதாழ்த்தி நன்றி காட்டுகின்றேன்.

அ. தமிழ்ப்பித்தன், மெணசி.



# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே !

குரல்-2 | தி பி. ௧௯௯௯ மீனம் (பங்குனி) ஏப்ரல்-68 | இசை-8.

## விடுமுறையை எப்படிக் கழிப்பீர்கள்?

தம்பி, தங்கைகளே! உங்களுக்கு விடுமுறை வரப்போகின்றது. அந்த விடுமுறையை எப்படிக் கழிப்பீர்கள்? "விடுமுறை தானே, காலை 8-மணிவரை தூங்குவோமே" என்று நினைக்கும் சோம்பேறிகளும் இருப்பார்கள் இல்லையா? அவர்கள் என்றைக்கும் சோம்பேறிகளே! விடுமுறையில் மட்டும் தூக்கம் எப்படி மிகுதியாக வரும்?

தூக்கம், உணவு, பொழுதுபோக்கு முதலியவற்றில் எப்பொழுதும் அளவாகவே நடந்து கொள்ளுங்கள் விடுமுறை நாள்கள் உங்களுக்கு அரிய நாள்கள். நல்ல, உயர்ந்த நூல்கள், ஊர்ப்பயணங்கள், பெரியோர் தொடர்பு, பொதுத்தொண்டு முதலியன விடுமுறையைக் கழிக்கும் சிறந்த வழிகள். கூடியவரை ஒரு நாளைக்கு ஒன்று, அல்லது இரண்டு நாள்களுக்கு ஒன்று என்ற வகையில் புதிய, சிறந்த நூல்களை நீங்கள் படிக்கலாம். விடுமுறைக்குள் குறைந்தது 15, 20 நூல்களையாகிலும் நீங்கள் படித்து முடித்துவிடலாம். அறிஞர் வரலாறுகள், பயணக்கட்டுரைகள், நாட்டு வரலாறுகள், கதைப் பாடல்கள், இலக்கியங்

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம். கடலூர்-1.

கள், அறிவியல் நூல்கள் முதலியவற்றை மாற்றி மாற்றி, சலிப் புருதபடி கற்று வரலாம்.

தங்களுக்குக் கிடைக்கும் சிறுசிறு தொகைகளைச் சேமித்து வைத்துள்ள பிள்ளைகள் 10, 15 பெயர்கள் சேர்ந்து அருகில் உள்ள மலைகள், ஆறுகள், ஊர்கள், காடுகள் முதலியவற்றை நோக்கிப் பயணம் போகலாம். இடையிலுள்ள இயற்கைக் காட்சி களைக்கண்டு களிப்பதும், ஆங்காங்குள்ள மக்களிடம் பேசி அவ ரவர்களின் வாழ்க்கை அமைப்புகளை அறிந்து கொள்வதும் நமக்கு எவ்வளவு இன்பம் சேர்க்கும் தெரியுமா? அவற்றால் நம் அறிவும் பெருகும்; மனமும் விரிவடையும்.

இன்னும் சிலர் விடுமுறைப் பொழுதில் தங்கள் தங்கள் ஊர் களிலோ, அண்டை அயலிலோ உள்ள சிறந்த ஆசிரியர்கள், அறிஞர்கள், பெரியோர்கள் முதலியவர்களைப் போய் அடிக்கடி பார்த்து உரையாடி ரலாம். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே" இல்லையா?

மாணவர்களில் சிலரும், பலருமாகச் சேர்ந்துகொண்டு அரு கில் உள்ள சிற்றூர்ப் புறங்களுக்குச் செல்வதும், அங்குள்ள மக்களுக்கு அறிவுரை, அறவுரை பல எடுத்துச் சொல்வதும் விடு முறையைக் கழிக்கும் இன்னொரு சிறந்த வழி. ஏழை மக்களுக் குத் தூய்மை, ஒழுங்கு இவற்றைப் பற்றி நீங்கள் கற்றவற்றைக் கூறி அவர்களை நல்ல மக்களாக ஆகும்படி செய்யலாம். அவர் களின் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கலாம். கல்லாத முதியவர் களுக்குப் படிப்பு சொல்லித் தரலாம். அவர்கள் வாழும் சுற்றுப் புறங்களைத் தூய்மைப் படுத்தலாம். அவர்கள் செய்யும் உழவு, தச்சு, நெசவு முதலிய தொழில்களில் நாமும் பங்கேற்கலாம். இவ்வழிகளில் நம் அறிவும் வளரும்; பிறர்க்கும் பயன் பெருகும்; மனமும் தூய்மையுறும். இவையல்லாமல் வீட்டில் இருந்து கொண்டே ஓவியங்கள் போடலாம்; பாடல்கள் எழுதலாம்; நீந்தத் தெரியாதவர்கள் நீந்தப் பழகலாம்; மிதிவண்டிவிடத் தெரியாத வர்கள் அதனைக் கற்றுக் கொள்ளலாம். நீங்கள் எந்த வகையில் விடுமுறையைக் கழித்தாலும் வீணான செயல்களில் ஈடுபட்டு வீணர்களாக மட்டும் ஆகக்கூடாது. நீங்கள் கழிக்கும் ஒவ் வொரு நாள் விடுமுறையும், உங்களை ஒவ்வொருபடி உயர்த்துவ தாக இருக்கட்டும்.

–பெருஞ்சித்திரன்.




# ஆபிரகாம் இலிங்கன்

—மு. மகிழரசன்—

செந்தமிழ்ச் செல்வங்களே’ சென்ற நூற்றாண்டுவரை அமெரிக்காவில் மாந்தனை மாந்தன் அடிமைப் படுத்திக் கொடுமைப் படுத்தும் மடமை பெரிதும் பெருகிக் குடிகொண்டு இருந்தது. அக்காலத்தில் ஆப்பிரிக்காவின் ‘நீக்ரோ’ என்ற கருப்பர் இனத்து ஏழை மக்களை ஆங்கிலேயர், ஆடுகள் மாடுகள் வாணிகம் போல, விலைக்கு விற்பதும் வாங்குவதும், தம் விருப்பம்போல் அவர்களைத் துன்பப்படுத்தி வேலை வாங்குவதும் ஆகிய கொடுமைகளைச் செய்து வந்தனர். இந்தக் கொடுமைகளை எதிர்த்து அடிமைத்தளையை அறுத்து எறிந்தார் அமெரிக்காவின் மக்கள் தலைவர் ஆபிரகாம் இலிங்கன்.

ஆபிரகாம் இலிங்கன் கெண்டக்கி என்ற மாநிலத்தில் ஓட்டுகென்சுவில்லி என்ற ஊருக்கு அருகில் 1809 ஆம் ஆண்டு பிப்பிரவரி திங்கள் 12 ஆம் நாள் ஞாயிறு அன்று பிறந்தார். வழிவழியாய் உழவுத் தொழில் புரிந்து வந்த ஏழைக்குடும்பத்தில்தான் அவர் பிறந்தார், மக்காச்சோளம், காய்கறிகள், காட்டுக் கனிவகைகள், மீன் இவையே அங்கு ஏழையர் உணவுப் பொருள்களாய் இருந்தவை ஆகும். புலிக்குப் பிறந்தது பூனை ஆகாது என்பதைப் போல, கடின உழைப்பாளர் குடியில் பிறந்த நம் ஆபிரகாமும் இளமையிலேயே கடின உழைப்பாளனாக வளர்ந்தார். உழைப்பில் பழக்கமும் ஊக்கமும் மிகுந்து இருந்த அதே நேரத்தில் அவருக்குக் கல்வி கற்பதில் அளவில் அடங்காத ஆர்வமும் தனிமுயற்சியும் நிறைந்து இருந்தன, தம் மூன்றாம் அகவை முதலே கழனியிலும் வீட்டிலும் தம் பெற்றோர்க்கு உதவியாக இருந்தார்

நாளொன்றுக்கு இரண்டு கல் தொலைவு நடந்து சென்று ‘நாப்கிரீக்கு’ என்ற சிற்றூரில் முதன் முதலாகக் கல்வி பயிலத் தொடங்கி

ஞர் ஆபிரகாம். அங்குக் குறைந்த கல்வியே கற்க வாய்ப்பு இருந்தது. அதையும் தொடர்ந்து, பயில இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அவருடைய தந்தை இண்டியாஞ என்ற ஊருக்குச் செல்ல நேர்ந்து விட்டதே காரணம். ஆபிரகாம், பள்ளிசென்று பெற்ற கல்வி மிகச் சிறிதே ஆகும். தம் வாழ்நாள் முழுதும் அவர் நான்கு மாதங்களே பள்ளிசென்று கல்விகற்க வாய்ப்புப் பெற்றார். ஆனாலும் தம் முயற்சி யாலேயே மிகுந்த ஆர்வத்துடன் பெருங்கல்வி பயின்றார். பிற்காலத் தில், அவர் தாமாகவே முயன்று சட்டத்தையும் கற்றார்! பட்டத்தை யும் பெற்றார். அவர் சிறுவனாக இருந்தபோது, எவ்வாறு அரும்பாடு பட்டுப் பெரும் ஈடுபட்டுக் கல்வியைப் பயின்றார், என்ற கதையைத் தமிழ்ச்சிட்டு முன்பே உங்களுக்குச் சொல்லி இருக்கிறது அல்லவா?

ஆபிரகாம் இளைஞனாக இருந்த போழ்து பலவகைத் தொழில்களி லும் ஈடுபட்டு வல்லவராகத் திகழ்ந்து இருந்தார், கடின உழைப்பாய கழனி வேலைகளில் உழவனாகவும், காட்டில் மரங்களை வெட்டும் விறகு வெட்டியாகவும் திறம்கொண்டு இருந்தார். தம் தந்தையிடம் தச்சு வேலையையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் சிறிது காலம் ஆடுமாடுகளை அறுக்கும் அறுவையாளன் (கசாப்புக்காரர்) ஆகவும் இருந்தார். பின்னர், பிறர் நிலத்து விளைபொருள்களை வேற் றூர்க்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யும் வணிகனாகவும் இருந் தார் இவ்வாறு பலதொழில்களிலும் ஆபிரகாம் ஈடுபாடு கொண்டிருந் தார். அவர் பிறரிடம் கூலிக்கு உழைத்தபோது தாம் பெறும் ஊதியத் திற்குப் பொருந்த நேர்மையாக உழைத்தார். அவர் ஓர் சிறந்த குத் துச்சண்டை மறவராகவும், ஓட்டம் முதலிய விளையாட்டுத் திறமுடைய வராகவும் திகழ்ந்து இருந்தாராம்!

ஆபிரகாம்இலிங்கன் மிக்க இரக்கமுள்ளவராகவும் இளகிய நெஞ் சினராகவும் இருந்தார். ஒரு முறை, இரவில், ஒரு குடிகாரன் தன் நிலை இழந்து புழுதியில் புரண்டு கிடப்பதைக் கண்டார். அவரோடு வந்த மற்ற இளைஞர்கள் உதவாமல் போய்விட்டபோதும் அவர் மட்டும் தனி யாகவே அந்தக் குடிகாரனைத் தம் தோள்மீது தூக்கிச் சென்று ஓர் அறையில் ஏந்தாக (வசதியாக) உறங்கச் செய்து உதவினார். தம் பத் தொன்பதாவது அகவையில் 'புதுஆர்லியன்சு' என்ற நகருக்கு வணிக னாகச் சென்றிருந்த போது அந்த நகரில் அடிமைகள் என்ற பெயரில் மாந்தரை விற்பதும் வாங்குவதுமாகிய கொடுமைச் செயல்களைக் கண் மூன்னர் கண்டு உள்ளம் வருந்தினார். எனவே அவர் 'எனக்கு வாய்ப்பு

கிடைக்குமானால் இந்த அடிமை விலங்கை அறுத்து ஒழிப்பேன்' என்ற உறுதியைத் தம் நெஞ்சினில் கொண்டார்.

புது சேலம் (அமெரிக்காவிலும் ஒரு சேலம் இருக்கிறது!) என்ற இடத்தில் சரக்குமண்டி (Store Room) ஒன்றில் பணியாற்றியபோது ஆபிரகாமின் அரசியல் வாழ்வு தொடங்கியது. நாளடைவில் அவரை நண்பர்கள் தேர்தலில் நிற்கத் தூண்டினார்கள். எனவே 'இலினாய்சு சட்டமன்றத்திற்கு ஆபிரகாம்இலிங்கன் போட்டியிட்டார், அவருடைய தேர்தல் பேச்சு ஒன்று வேடிக்கையாக உள்ளது.

"பெரியோர்களே! தோழர்களே! நான் யார் என்று நீங்கள் அறிவீர்கள் என்று நினைக்கிறேன், நான்தான் பணிவுள்ள ஆபிரகாம்இலிங்கன். நண்பர்கள் என்னைச் சட்டமன்றத்துக்குப் போட்டியிடுமாறு தூண்டினார்கள். என்னுடைய அரசியல் கொள்கை, ஒரு முதுகிழவியின் நடனத்தைப் போல மிகச்சிறியதும் இனியதும் ஆகும். நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் நன்றி உள்ளவனாக இருப்பேன்; இல்லையென்றால் ...... எல்லாம் ஒன்றுதான்"

சிறுவர்களே நீங்களும், நம்நாட்டுத் தலைவர்கள்! தேர்தலுக்காகப் பேசும் எத்துணையோ அருவருக்கத் தக்க மேடைப் பேச்சுகளைக்கேட்டு இருப்பீர்கள். ஆனால் நம் ஆபிரகாம்இலிங்கனின் தேர்தல் பேச்சு எவ்வாறு இருக்கிறது, எண்ணிப் பாருங்கள்.

இந்த முதல் தேர்தலில் ஆபிரகாம் தோற்றுவிட்டார்: ஆதலால் மீண்டும் வேறு தொழில்களில் ஈடுபட்டார். பின் அஞ்சலகத் தலைவராகவும், துணை அளவையாளர் (Assistant Surveyor) ஆகவும் அமர்த்தப்பட்டார். பின் மீண்டும் அவர் 1834ஆம் ஆண்டில் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். பின்வந்த தேர்தல்களிலும் வெற்றிபெற்றார்; இவ்வாறு அவர்தம அரசியல் வாழ்வில் தேர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று விளங்கினார். அவர் மேடைப் பேச்சுகள் மிகவும் சுருக்கமானவை; ஆனால் உருக்கமானவை; கருத்துப் பெருக்கமானவை. கொள்கை இறுக்கமானவை; மக்களைக் கவரத்தக்கவை. எனவேதான் 1861ஆம் ஆண்டில் தம் இறுதிக் கட்டமாக அவர் அமெரிக்காவின் மக்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அமெரிக்க ஒன்றிய நாடுகளின் (United States) கூட்டை வலுப்படுத்துவதும் அடிமைத் தளையை அறுத்தெறிவதும் அவர் இறுதியான உறுதியான கொள்கைகளாய் இருந்தன. அந்நாளில் ஒன்றிய நாடுகளின் வடக்கில் மாந்த அடிமைத்தனத்திக்குப் பெரும்பான்மை

எதிர்ப்பும், தெற்கில் பெரும்பான்மை வளர்ப்பும், காப்பும் இருந்தமையால் பூசல்கள் எழுந்து வளர்ந்து கொண்டு இருந்தன. அவற்றின் விளைவாக, ஆபிரகாம் தாம், முழுமையாகப் பதவிப்பொறுப்பு ஏற்றுக் கொண்ட சில நாட்களிலேயே வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே பெரும் போர் மூண்டு. நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நீண்டது. இறுதியில் எதிர்ப்புக் கொள்கையாளர்களுக்கே வெற்றி கிட்டியது.

எனவே ஆபிரகாம்இலிங்கனின் விருப்பப்படி 1865 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் மாந்த அடிமைத்தனத்துக்குத் தடை விதிக்கும் சட்டம் இயற்றத் தீர்மானிக்கப்பட்டது. மாந்தனாகப் பிறந்த யாரும் பிறிதொரு மாந்தனுக்கு எவ்வழியாலும் அடிமை இல்லை. அனைவரும் சரிசமம் என்ற முறைமை நிலைநாட்டப் பெற்றது.

தாம் சிறுவனாக இருந்தபோது எடுத்துக்கொண்ட உறுதியைப் பிற்காலத்தில் நிறைவேற்றி விட்டோம் என்ற பெருமையும் மகிழ்ச்சியும் நிறைவும் ஆபிரகாம்இலிங்கன் பெற்றார். வெற்றிப் பெருமிதமும் உற்றார்.

ஆபிரகாம்இலிங்கன், 1865 ஆம் ஆண்டு ஏப்பிரல் 14 ஆம் நாள் மாலையில் நாடக அரங்கு ஒன்றில் அமர்ந்திருந்தபோது, அடிமைக் கொள்கை வெறிபிடித்த தெற்கினன் ஒருவனால் எதிர்பாராவகையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் கொலைப்பட்ட செய்திகேட்ட அமெரிக்க மக்கள் ஆறுத்துயரெய்தித் தீராத்துன்பம் அழுந்தினர்.

'நான் யாருக்கும் அடிமையாக இருக்க மாட்டேன்' என்ற நெஞ்சுரமும் பீடும், 'யாரையும் அடிமைப்படுத்தும் ஆண்டை (Master) யாகவும் இருக்க மாட்டேன்' என்ற நேர் அறமும் ஈடும் கொண்டு வாழ்ந்தவர் நம் ஆபிரகாம் இலிங்கன். உலகத்துப் பெரியோர்களில் ஆபிரகாம் மிகப் பெரியவர் ஆவார். அப்பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கதைகளில் ஆபிரகாமின் கதை மிகப் பெரிய கதை; அரிய கதை ஆகும். நம் நெஞ்சங்களை இறுதியில் தொடும் கதையும் ஆகும். ஆகவே நீங்கள் கட்டாயம் வருங்காலத்தில் அவர் வரலாற்றுக் கதையை இன்னும் விரிவாகப் படித்துத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

செழுந்தமிழ்ச் சிறுவர்களே! நம் நாட்டிலும், ஒரு மாந்தன் தன்னை உயர்ந்தவனாகவும் இன்னொருவனைத் தாழ்ந்தவனாகவும் வேறுபடுத்திக்கொண்டு ஏமாற்றித் திரியும் கீழ்மைநிலை தொடர்ந்து உலவி வருகின்றது. இத்தகைய நிலைக்குக் காரணம் இங்கு மலிந்து கிடக்கும்

# அறிவியல் புதுமைகள்.

இரா. வ. சனார்த்தனம், பள்ளிநேலியனூர்.

1 'ஒலிப்பதிவு நாடாப் பொறி'யில் மிகச் சிறியது $4\frac{1}{2}$ விரற்கடை நீளம்; $3\frac{1}{2}$ விரற்கடை அகலம். $1\frac{1}{2}$ விரற்கடை கனம்கொண்டது 'ஆசுத்திரியா'வில் செய்யப்பட்டுள்ளது.

2 'பிரான்சில்' 1/12 கனமும், அஞ்சல் அளவும் உள்ள ஒரு 'வானொலி'யைச் செய்துள்ளனர்.

3 'இலண்டன், மாநகரில் 9 விரற்கடை. நீளமுள்ள ஓர் உந்த மிதிவண்டியை (மோட்டார் சைகில்) ஒருவர் கண்டுபிடித்துள்ளார். ஒளிபெருக்கி ஆடியின் உதவியால் இதன் உறுப்புக்களைச் செய்தாராம்.

4 '1 சதுர மில்லி மீட்டர்' பரப்புள்ள 'தான்தே' என்ற இத்தாலியப் புலவரின் வண்ணப் படத்தை செருமானியப் பொற்கொல்லர் ஒருவர் தீட்டியுள்ளார். விலை 14,125 உருபா.

5 சப்பானில் தொட்டால் மணிகாட்டும் சிறிய செவி அணிகலன் ஒன்றை அறிஞர்கள் செய்துள்ளனர்.

6 1 விரற்கடை கனம், ஒரு விரற்கடை அகலம், ஒன்றரை விரற்கடை உயரம் உள்ள 'மின்னுற்றல் மணிப்பொறி' ஒன்று சப்பானில் செய்யப்பட்டுள்ளது.

7 'கலிபோர்னியா'வில் செயற்கையில் மின்னுற்றலால் இயங்கும் மாந்தனை அமைத்துள்ளனர். மருத்துவர்கள். அவனுக்கு நோய்களை உண்டாக்கி அதைக் குணப்படுத்த ஆராய்வதற்காக அவன் கண்டுபிடிக்கப்பட்டான்.

8 1 விரற்கடைத் திரையைக் கொண்ட கையடக்க வானொளிப் பெட்டி ('டிரான்சிசுடர் டெலிவிசன்') ஒன்றை சப்பானில் சேணி' என்ற நிறுவனம் அமைத்துள்ளது. எடை 2 இராத்தல்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

நமக்குத் தேவையில்லாத சாதி குலச்சமய வேறுபாடுகளும் அவை உண்டாக்கிய பழம் பொய்க்கதைகளும் ஆகும். எனவே நீங்களும் இந்தச் சாதி குலம் சமயம் முதலியவற்றை ஒழித்துக்கட்டி மாந்தர் அனைவரும் பிறப்பால் ஒருநிகர் என்ற உண்மை இயற்கையை நிலை நிறுத்திக்காண நம் ஆபிரகாம்இலிங்கனைப்போல உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். உள்ளத்தில் நிறுத்திக்கொள்ளுங்கள்; இறுதியாய் நிறைவேற்றுங்கள். "நமக்குள் சாதிகள் இல்லை; மதங்கள் தொல்லை. உலகம் அனைத்தும் ஒன்றே. மாந்தர்குலம் ஒன்றே; உயிர்கள் அனைத்தும் ஒன்றே இறைவன் நமக்கு ஒன்றே ஒருவனே! அவன் கோயில் நம் தூய உள்ளமே" என்ற கொள்கையைக் கடைப்பிடியுங்கள். O




சென்றமாதப் புதிரின் விடை.

“உண்மையில் மரம்தான் நிறைமிக்கது” என்ற மாநாய்க்கர், “வெற்றிடத்திலுள்ள நிறைதானே உண்மையான நிறை! தாங்கள் அளித்த இரண்டு பொருள்களையும் வெற்றிடத்தில் நிறுத்தால் மரமே நிறைமிக்கது” என விளக்கினார்.

காரணத்தை உசாவிய மாசாத்துவானை நோக்கி மாநாய்க்கர் கூறுகிறார்: “ஆர்க்கிமிடீசின் பொருளியல் கோட்பாட்டின்படி, (நீர்மத்தில் மட்டுமன்றி) காற்றிலும் மூழ்கி இருக்கும் பொருள் தனது எடையில் ஒருபங்கை இழக்கிறது. இவ்வெடை இழப்பு அதனால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட (அதாவது அதன் கன அளவுள்ள) காற்றின் எடைக்குச் சமம். வெற்றிடத்தில் நிறுத்தால் இவ்விழந்த எடையையும் கூட்டிக்கொள்ள வேண்டுமல்லவா?

“ஆகையால் வெற்றிடத்தில் காற்றில் நிறுத்த மரத்தின் உண்மையான நிறை.

ஒருபேரெடை + மரத்தின் கன அளவுள்ள காற்றின் எடை. காற்றில் நிறுத்த இரும்பின் உண்மையான நிறை = ஒரு பேரெடை + இரும்பின் கன அளவுள்ள காற்றின் எடை.

இரும்பின் கன அளவைவிட அதே எடையுள்ள மரத்தின் கன அளவு ஏறத்தாழ 13 மடங்கு மிகுதி. நிறை = கன அளவு X அடர்த்தி மரத்தின் அடர்த்தி எண். 6 (அடர்த்தி கனமீட்டருக்கு 0-6 பேரெடை) எனக்கொண்டால்,

ஒரு பேரெடை மரத்தின் கன அளவு = 1.6667 க மீ. இரும்பின் அடர்த்தி எண் 7.88 பேரெடை) ஆகையால் ஒரு பேரெடை இரும்பின் கன அளவு = 0.1269 க. மீ காற்றின் அடர்த்தி கனமீட்டருக்கு 1.293 எடை எனவே,

மரத்தின் உண்மை நிறை = ஒருபேரெடை + (1.667X1.293) எடை.

இரும்பின் உண்மை நிறை = ஒருபேரெடை + (0.1269X1.293) எடை.

வேறுபாடு = (1.5398X1.293) எடை.

= 1.991 அல்லது 2 எடை.

இவ்வாறு ஒரு பேரெடை மரம் ஒரு பேரெடை இரும்பைவிட 2 எடை நிறைமிக்கதாயிருக்கிறது.”

# கழுதை அழுத கதை.

## துரை-மாணிக்கம்

"மக்கள் என்ற பேராலே
 வாழ்ந்துவரும் மாந்தரிடம்
தக்கபடி மண்டியிட்டு
 வாழந்து மடிவதுவே
இக்கொடிய பாரில்
 எமக்கிட்ட வாழ்க்கையென
அக் கொடிய ஆண்டவனும்
 ஐயோ படைத்துவிட்டான்;
நாளும் பிறக்கின்ருேம்;
 நாளும் இறக்கின்ருேம்;
நீளும் துயர்வாழ்க்கை
 நிற்பதுதான் என்றைக்கோ?"

–என்று பலவாருய்
 எடுத்துரைத்துத், தாய்க்கழுதை
முன் நின்ற குட்டி
 முகத்தில் முகம்வைத்துக்
கண்ணீர் சொரிந்தபடி
 கால்வலிக்க நின்றழுது
மண்ணில் அமர்ந்து
 மனம்வருந்திக் கொண்டிருக்கும்
வேளையிலே, எங்கிருந்தோ
 வெள்ளை நிறம்வாய்ந்த
காளை மா டொன்று
 கழுத்து மணியசைய
அங்குவந்து சேர்ந்தே
 அதிரும் குரலெடுத்தே
எங்கும் நடுங்க
 இடிமுழக்கம் இட்டதுகாண்!
இட்ட முழக்கால்
 எதிரில் அமர்ந்திருந்த

பெட்டைக் கழுதை
　　பிடரி நடுநடுங்கக்
குட்டி தனையணைத்துக்
　　கொண்டபடி, காளையினை
எட்டி யிருந்தே
　　இருவிழியால் நோக்கிற்று.
"நீண்டு நிமிர்ந்தவுடல்;
　　நெட்டைக் கால்கள் நான்கு!
கூண்டுபோல் நின்ற
　　குமிழ்ஒன்று! நீண்டவால்!
ஈட்டிகள்போல் கொம்பிரண்டு!
　　ஏறெடுத்த நல்லநெற்றி!
தீட்டிவைத்த கட்டாறி
　　போல்திகழும் காதிரண்டு.
வெள்ளைத் திருமேனி!
　　வீங்கியுள்ள நீள்கழுத்து!
கொள்ளை அழகுமுகம்!
　　கூர்த்தகன்ற கண்ணிரண்டு!
சால்போன்ற நல்வயிறு!
　　சாணைக்கல் போல்நாக்கு!
கோலக் கழுத்தில்
　　குலுங்கும் தசைத்திரளை!
நன்றாய்க் கறுத்தே
　　ஒளிதெறிக்கும் நல்மூக்கு!
நின்றால் அழகு!
　　நடந்தால் மிக அழகு!
பாராளும் வேந்தன்போல
　　பட்டாளக் காவலன்போல்
நேர்நிமிர்ந்த வீறுநடை!
　　நெட்டுநெளி யாமுதுகு!
என்னே! அடடா!
　　இதனழகு கொள்ளை! கொள்ளை!!
இன்னபடி யன்றே
　　பிறவிஎடுத் தல்வேண்டும்"

—என்றபடி தாய்க்கழுதை
ஏக்கப் பெருமூச்சாம்
ஒன்றைத்தான் குட்டி
முகங்கருக விட்டதுகாண்!
மூச்சு முகம்படவே,
குட்டி முகந்திரும்பி,
"பேச்சற்று, ஏன் அம்மா
பெருமூச் செறிகின்ருய்!
இக்காளை மாட்டிஞல்
ஏதும் துயர்வருமா?
பக்கம் வருமுன்னே
ஓடிப் பதுங்குவமா?"

—என்றே வினவிற்று;
இதுகேட்டுத் தாய்க்கழுதை,
'ஒன்றுக்கும் அஞ்சாதே!
ஓடிடவும் தேவையில்லை;
இக்காளை மாட்டிற்(கு)
இருக்கும் அழகைப்பார்!
முக்காலும் அந்த
முகம்நமக்கு வாராதே!
ஈரம் பிசுபிசுத்த
தோலும் திரிதிரியாய்
நாரத்தங் காயின்
நடுநார்போல் மேனியெங்கும்
தொங்கும் பழுத்த
மயிர்த்திரளும், தொய்முதுகும்,
தங்கும் அடிபெருத்த
தாழி எனவயிறும்,
முட்டியிடு காலும்,
முழம்நீண்ட காதுகளும்,
குட்டைக் கழுத்தும்
குறுஉடலும் வெள்மூக்கும்,

பாழ்மிகுந்த வாயைப்
பிளந்து குரலெடுத்தால்
'காழ்காழ்'என் றேலக்
கனைப்பும், பெருமூச்சும்,
தூ! தூ! தூ! என்னஇது
தோற்றமா? வீண்பிறப்பா?
ஏதுமற்ற வாழ்க்கை!
எதைநினைந்து நாம்மகிழ?
நம்மை இறைவன்
நடுநிலையில் லாப்பொழுதில்
வெம்மை மனத்தோடு
வீற்றிருக்கும் வேளையிலே,
எல்லா விலங்கினையும்,
எல்லா எழிலோடும்
எல்லா நிறத்தோடும்
ஏற்றமுறத் தோற்றியபின்,
மிச்சம் மிகுந்த
நிறத்தை அழகையெல்லாம்
எச்சமறக் கூட்டி
இருகையால் தான்பிசைந்தே
அச்சில்லா வார்த்த
அழகில்லாத் தோற்றமடி!
எச்சில் பிறவியடி!
ஏக்கமுறும் வாழ்க்கையடி!
தோற்றம் இழிவு!
துவள்கின்ற வாழ்வுஇழிவு!
ஆற்றும் பணியிழிவு!
ஐயோ! இழிவு! இழிவு!
வாளில்லை; இல்லையெனில்
வாழ்வை முடித்திருப்பேன்!
கேள்நன்றாய்! இன்னும்
கிளத்துகின்றேன் என் மகளே!

(தொடரும்)



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

-புலவர். தி. நா. அறிவு ஒளி-

## வலிமிகா இடங்கள்

நிலைமொழியோடு சேரவரும் வருமொழியின் முதலெழுத்து வல்லினமாக இருப்பினும் சிலவிடங்களில் வல்லெழுத்து (க,ச,த,ப) மிகுவதில்லை.

1 அது, இது, எது என்னுஞ் சுட்டுப்பெயர். வினாப் பெயர்களின்முன் வல்லெழுத்து மிகாது.
அதுகுறிது, இதுசிறிது, எதுபெரிது.

2 அவை, இவை, உவை, எவை, யாவை, யாது, ஏது, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு,
படி என்பவற்றின் முன் வலிமிகாது.
அவை பறப்பன, இவை திரிவன, உவை படுவன, எவை கண்டவை, யாவை சரிந்தவை, யாது கூறுவாய், ஏது தந்தாய், அவ்வளவு கயமை, இவ்வளவு கடுமை, எவ்வளவு தண்மை, வரும்படி சொன்னான், செய்யும்படி கூறினான்.

3 ஆ, ஓ, ஏ, என்னும் வினாவெழுத்துகளின் முன் வல்லினம் மிகாது.
அவளா கண்டாள்? இவரோ பறித்தார்? அவனே கொய்தான்?

4 'யா' என்ற வினாப்பெயருக்குமுன் வலி மிகாது.
யா பெரியன?, யா குறியன?, யா சிறியன?

5 ஏ, ஓ, என்னும் இடைச் சொற்களின் முன் வலிவரின் மிகாது.
நீயே சொல், அறமே, பொருளே, காமமே, வாளோ சிறிது
[இவ்விடத்தில் வந்துள்ள 'ஏ-ஓ' என்னும் எழுத்துகள் வினாப் பொருளில் வந்தவை யல்ல.]

6 அஃறிணைப் பன்மைகளான பல, சில, அம்ம என்னுஞ்சொற்களின் முன் வல்லெழுத்து மிகாது.
பல கழுதைகள், சிலசொற்கள், அம்ம கொற்றா,

7 சில விடங்களில் யகர, ரகர, ழகர மெய்பீறுகளின் (ய்,ர்,ழ்,) முன்வலி மிகாது.
பாய் பின்னினன், வேர் பிடுங்கினன், தமிழ் கற்றன்.

8 சில உரிச் சொற்களின் முன்வலி மிகாது.
நனிதின்றன், கடிகா,

9 உகர ஈற்றின் முன் சிலவிடங்களில் வலி மிகா.
ஒரு பாட்டு (ஒன்று என்பதன் விகார எண்ணுப்பெயர் ஒரு) இரு குதிரை, அறுகோட்டம், எழுபிறப்பு,

10 முன்னிலைப் பெயர் (நீ, நீர், நீவிர் முதலியன) முன் வலி மிகாது.
நீ பெரியவன், நீவிர் சிறியோர்.

11 முன்னிலை வினை முன் வலி மிகா. (ஏவலின் முன்வலி மிகா)
வா தமிழரசி. செய் சோழா. பார் பாண்டியா, வாழ் கபிலா; எறி கண்ணு; ஓடு சாத்தா.

12 வியங்கோள் தொடரில் வலிமிகா.
தமிழ்வாழி + பல்லாண்டு = தமிழ்வாழி பல்லாண்டு,
வாழ்க தமிழ், வெல்க தமிழர்; செழிக்க தமிழகம், வளர்க குறள்நெறி.

13 வினையாலணையும் பெயர்முன் வலிமிகாது.
கண்டறியாதன கண்டேன், படிக்காதவர் படித்தனர்.

14 சில எண்ணுப்பெயர்களின் முன் க ச த ப மிகா.
ஆறுதாள்கள், இரு கண்கள், ஐந்து தலைகள், ஒரு கை.

15 பொதுப்பெயர், உயர் திணைப் பெயர்கள்முன் சில விடங்களில் வலிமிகாது.
சாத்தி சிறியள், தாய் தந்தாள், நீர் பேசலாம் (பொதுப் பெயர்).
நம்பிகண்டான், தம்பி பெரியவன், கன்னி கழறினள் (உயர் திணைப்பெயர்.)

16 விளிப்பெயர்முன் வல்லினம் மிகாது.
தொல்காப்பியா, கொள்க; தம்பீ போ, அண்ணு செய், கபிலா சேர்.

17 எழுவாய்த்தொடரில் வலி மிகாது, இயல்பாகும்.
குருவி சிறியது, அறிவு பிறந்தது, ஒளி தெரிந்தது. யானை பெரிது.
கோழி கூவிற்று, ஊர் பெரிது, புகழ் பரவியது, பொழுது போயிற்று.

18 வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.
பறந்தது பைங்கிளி, ஓடின கரடிகள், சிறிது பேழை.

19 செய்த, செய்கின்ற எனும் அகரயீற்றுப் பெயரெச்சத் தொடரில் வலிமிகா.
வந்தபெண், ஓடிய பாம்பு, ஆடினகூத்து, பாடுகின்ற பாட்டு.
நல்ல பையன், பெரியசெடி (குறிப்புப் பெயரெச்சம்)
உண்ணாத பெரியர் (தெரிநிலை எதிர்மறைப் பெயரெச்சம்)

20 சில வினையெச்சத் தொடரில் வலிமிகாது
உண்டு சென்றான், கொய்துகொண்டுவா செய்யாது போனான் நெடிது பேசினான், விரைந்துபோனான். உண்ணாது சென்றான் இல்லாது போயிற்று, உண்ணிய போனான் (உண்ணியவென்ற சொல் செய்யியயென்னும் வினையெச்சம்)

21 வினைத்தொகையில் வலிமிகாது.
ஓடுகால், கூப்புகை, ஈட்டுபொருள் சுடுசோறு, வளர்தெங்கு நாட்டுபுகழ்,

22 உம்மைத் தொகையில் வலிமிகாது.
வெற்றிலைபாக்கு, சேர சோழ பாண்டியர், தந்தைதாய், புலி கரடி, நன்மை தீமை, மார்கழி தை, பலகை புத்தகம், கல்வி கேள்வி.

23 வன்றொடர்க் குற்றிய லுகரத்தைத் தவிர்த்த, மற்றக் குற்றிய லுகரங்களில் சில இடங்களில் வலி மிகாது.
காசு தந்தான் (நெடிற்றொடர்) வரகுபெற்றான் (உயிர்த்தொடர் எஃகுகொண்டான் (ஆய்தத் தொடர்) மார்பு சிறிது (இடைத் தொடர்)

வந்துகொடுப்பார் (மென்றொடர்) மருந்து தின்றான் (மென்றொடர்)
செய்து தீர்த்தான் (இடைத்தொடர்)

24 சில இடங்களில் இரண்டாம் வேற்றுமைத் தொகை முன் வல்லினம் மிகுவதில்லை.

நிலைகண்டேன், நீர்குடி, பிணிதீர்த்தான், வாய்பொத்தினான், விடை தெரிந்தான், மலை பார்த்தேன், உடை தோய்த்தான், புளிதின்றாள்.

25 மூன்றாம் வேற்றுமைத் தொகையின் முன் சிலவிடங்களில் வலி மிகாது.

கத்தி குத்தினான், ஈட்டி பாய்ச்சினான்.

26 மூன்றாம் வேற்றுமை யுருபாகிய 'ஒடு' 'ஓடு', என்பவை முன் வரும் வல்லினம் மிகாது.

மகனொடு தந்தை, அவளோடு சென்றான், புலியொடு பொருதான் பாம்போடு பழகேல், கையோடு கைசேர், சோறொடுகறி.

27 ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபுகளாகிய இருந்து, நின்று என்பவற்றின் முன் வலிமிகாது.

ஊரிலிருந்து சென்றாள், அதனின்று பிரித்தான்.

28 ஆறாம் வேற்றுமை யுருபாகிய அது; 'ஆது', 'அ', ,உடைய' என்பவை முன்வரும் க ச த ப மிகாது.

பூங்குன்றனது தோள், பூங்குன்றனது புத்தகம், நினது தலை, நின தாள் (நின் + அ). பூங்குன்றனுடையகண், என்னுடைய பாட்டு.

29 சிலவிடங்களில் நான்காம் வேற்றுமைத் தொகையின் முன் வலி மிகாது.

பள்ளி சென்றான், செல்வி கணவன், அவ்வை குழந்தை.

(தொடரும்)




- தமிழ்ச்சிட்டினால் பல்துறை அறிவையும் பெற்று வருகின்றோம். காந்தியடிகளின் வரலாற்றை (அவர் பிறப்பு முதல் இறப்புவரை) மாணவர்களாகிய எங்களுக்குச் சுருக்கித் தமிழ்ச்சிட்டில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

  இரா. சண்முகம், ந. ஆறுமுகம், அந்தநல்லூர்
  ஊராட்சி ஒன்றியம், பேட்டைவாய்த்தலை, கரூர்வட்டம்.

- தமிழ்ச்சிட்டில் வெளிவரும் இலக்கண விளக்கம் பலராலும் விரும்பிப் படிக்கப்படுகின்றது. மாணவர்கள் மட்டுமல்லாமல், தென்மொழி போன்ற தூய தமிழ்நடை நூல்களைப் படிக்க முடியாத பெரியவர்களும் தமிழ்ச்சிட்டைப்படித்து வருகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு இன்னும் கொஞ்சம் எளிமையாகவும், விளக்கமாகவும் இருந்தால் இலக்கணப் பகுதி பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக விளக்க வேண்டிய தலைப்புகள்.

  1. குற்றியலுகரம், முற்றியலுகரம்.
  2. இரண்டாம் வேற்றுமை விரி, வேற்றுமைத் தொகை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
  3. சார்ந்துவரும் சொல் என்பதை எளிதில் அடையாளம் காணும் வழிமுறை.

  தமிழாசிரியர் யாரையும் அணுகாமல் இலக்கணம் அறியும் வண்ணம் வழிசெய்யுங்கள்.

  —பெ. முத்துசாமி, சாத்தனூர் இல்லம், சோளிங்கபுரம்.

- வரலாற்று பகுதிகளில் மறைமலையடிகளார், பாரதிதாசன், சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழ் முன்னோடிகளின் வரலாறுகளை வெளியிட வேண்டிக் கொள்கின்றோம். தமிழ்ச்சிட்டு படிக்கும் மாணவர்களுக்கு அவர்கள் வரலாறு நல்ல வழிகாட்டியாக இருக்கும்.

  —ம. இராமசுந்தரன், திருச்சி-2.

# பயன் மொழிகள்.

0 அறநெறிகளின் நுண்மையை உணர்ந்தும் முதியவராயும் இருப்பவர்களது நட்பின் அருமையை உணர்ந்து அவருடன் நட்புச் செய்க.

0 அறிவு முதலியவற்றில் தம்மினும் பெரியோருடைய நட்பு, நமக்குள்ள வலிமைகளில் எல்லாம் மிக வலிமையுடையது.

0 தீயனவற்றை இடித்துச் சொல்பவரை நண்பராகப் பெற்ற ஒருவரை, எவராலும் கெடுக்க முடியாது.

0 பலரோடும் பகைத்துக் கொள்வதைவிட, நல்லவர் ஒருவரின் தொடர்பைக் கைவிடுவது மிகத் தீயது.

0 தாம் எடுத்த அரிய வினைமுடிக்கும் ஆற்றல் உள்ளவரை இகழாமை, காப்பானவற்றுள் பெரிய காவலாம்.

0 மனம் திருந்தியவர் போல் வெளிக்காட்டிக் கொண்டாலும், ஒருவருடைய அறிவு அவர் சேர்ந்திருக்கும் கூட்டத்தைப் பொறுத்ததே ஆகும்.

0 நல்லது என்று எண்ணிச் செய்வதிலும் குற்றம் நேர்வது உண்டு. அதனை அவர் அவர் பண்பறிந்து செய்யாமையால் வருவது அது.

0 நாம் செய்யும் வினைகளின் திறங்களை யெல்லாம் தவறுமல் எண்ணி இடமறிந்து செய்துவிட்டால், நம் செயல்களுக்கு அஞ்சாமையைத் தவிர வேறு துணைவேண்டியதில்லை.

0 செலவிடும் தொகையின் அளவு வருமானத்தைவிட மிகுதியாக இல்லாவிட்டால் வருமானம் மிகக் குறைவாக இருந்தாலும் தீமையில்லை.

0 அவரவர்களும் மகிழ்ச்சியால் வலிமையடையும் பொழுது, முன்னர் அம்மகிழ்ச்சியால் செயல்களை மறந்து, கெட்டுப் போனவர்களை எண்ணிப் பாருங்கள்.

(திருக்குறள் கருத்துகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.